மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 118/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செல்லக்கிளி | நாள் | 03.01.2023 |
| கணவர் பெயர் | காத்தமுத்து | | |

**2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

9) இவ்வழக்கில் நான் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ள பட்டா என் தந்தை பெயரில் நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் போது வழங்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி நிலவுடமை மேம்பாட்டு திட்டத்திற்கு பின்பு வழங்கப்பட்ட கணிணி பட்டாவை நான் இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

10) இவ்வழக்கை நான் 2016 ம் வருடத்தில்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பட்டாவானது 24.11.1983 ம் தேதியில் என் தந்தை பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டாவைத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

11) நான் இவ்வழக்கில் தாவா சொத்திற்குரிய கணிணி பட்டாவை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால், என் தந்தை பெயரிலுள்ள பழைய பட்டாவே போதுமானது என்பதால் நான் தனியாக தற்போதைய கணிணி பட்டாவை தாக்கல் செய்யவில்லை.

12) அமரம் கிராமம் ச.எண்.57/5 ல் உள்ள 6 ஏக்கர் 97 செண்ட் நிலம் முத்துக்கவுண்டர், அவரது மனைவி நாதியம்மாள் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்களது காலத்திற்கு பின் அவரது வாரிசுகளான நாரணி கவுண்டர், அய்யண்ண கவுண்டர், சின்னகுழந்தை மற்றும் பாட்ட கவுண்டர் ஆகியோர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்மொழி பாகபிரிவினையின் படி அய்யண்ண கவுண்டருக்கு 1 ஏக்கர் 93 செண்ட் நிலமும், என் தாத்தா சின்னகுழந்தைக்கு 1 ஏக்கர் 79 செண்ட் நிலமும் ஒதுக்கப்பட்டது என்றால், சரியல்ல. என் தாத்தா சின்னகுழந்தை மட்டும்தான் மேற்படி முத்து கவுண்டரின் ஒரே வாரிசு ஆவார்.

13) அவ்வாறு மேற்படி முத்துகவுண்டரின் வாரிசுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட வாய்மொழி பாகபிரிவினையின் படி அவர்களது மகன்களில் ஒருவரான அய்யண்ண கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட 1.93 ஏக்கர் நிலத்தை மேற்படி அய்யண்ண கவுண்டரின் வாரிசுகளான கோபால் மற்றும் ராமலிங்கம் ஆகியோர்கள் வாய்மொழியாக பாகபிரிவினை செய்துகொண்டு அதன்படி மேற்படி கோபாலுக்கு 1 ஏக்கர் 16 செண்ட் நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

20) மேற்படி 2ம் பிரதிவாதி கோபாலுக்கு ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் 16 செண்ட் நிலம் ச.எண்.57/5Lல் அமைந்துள்ளது என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதி கோபால் மேற்படி ச.எண்.57/5Lல் உள்ள 1 ஏக்கர் 16 செண்ட் நிலத்தின் உரிமை மற்றும் அனுபவத்தில் இருந்ததன் அடிப்படையில் மேற்படி 2ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா எண்.471 வழங்கப்பட்டுள்ளது என்றால், அது தவறானது.

21) மேற்படி 2ம் பிரதிவாதி ச.எண்.57/5Lல் உள்ள 1 ஏக்கர் 16 செண்ட் நிலத்தில் தன் மகன் 3ம் பிரதிவாதியான முத்துவிற்கு 11.04.2002ம் தேதியில் 30 செண்ட் நிலத்தை பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால், அது தவறானது.

(2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.